செ.வெ. எண்: 360 நாள்: 21.06.2012

# பத்திரிகைச் செய்தி

இன்று 21.06.2012 மாலை 4.00 மணியளவில், தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ந. சுப்ரமணியம் அவர்களின் முன்னிலையிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் திருத்தியமைக்கப்பட்ட மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலர் திரு ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். கூடுதல் காவல்துறை இயக்குநர் திரு டி. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., விளக்க உரை அளிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ந. சுப்ரமணியம் அவர்கள் முன்னிலை உரையாற்றினார். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமை உரையும் வழங்கினார்கள். உறுப்பினர்களின் கருத்துரைகள் கேட்கப்பட்டன.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க இயற்றப்பட்ட குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு)ச் சட்டம் 1999 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995 ஆகியவற்றின் செயல்பாடுகள், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட தீருதவிகள், மறுவாழ்வு, வளர்ச்சிப் பணிகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டன. மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்ற விவரம், வன்கொடுமையைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள காவல்துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் செயல்பாடு, சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படும் விதம், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள், நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள், விசாரணையில் உள்ள வழக்குகள், தண்டனையில் முடிவுற்ற வழக்குகள் போன்றவைகளும் விவாதிக்கப்பட்டன. மேலும், சமூக நீதி விழிப்புணர்வு முகாம்கள், மக்கள் விழிப்புணர்வுப் பேரணிகள், சமபந்தி விருந்து, வன்கொடுமைக் கிராமங்களைத் தெரிவு செய்தல், தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் இணக்கமுடன் வாழும் கிராமங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல், வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்கள் சரியாக, விவைாக நடைமுறைப்படுத்தப்பட்டனவா, பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட்டன போன்றவைகள் இக்கூட்டத்தில் உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது தலைமை உரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாம் பதவியேற்றவுடன், ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு தமிழக வரலாற்றில் முதன் முறையாக ஆதிதிராவிட துணைத் திட்டத்தின்கீழ் ரூ.5007 கோடி ஒதுக்கி ஆணையிட்டுள்ளதாகவும், தற்போது 2012–2013ல் அதை மேலும் அதிகரித்து ரூ.6108 கோடி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளதாகவும், கடந்த ஆட்சிக் காலத்தில் 2010–2011ல் ரூ.3828 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது எனவும் சுட்டிக்காட்டினார். நல்ல தரமான கல்வியை வழங்குவதன் மூலம் மட்டுமே சமுதாய மக்களின் சமூக நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதனை உணர்ந்து, தமிழக வரவு செலவு திட்டத்தில், 2010–11ல் ரூ.889 கோடியாக இருந்த, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான ஒதுக்கீட்டினை 2012–2013ல் ரூ.1290.91 கோடியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தி இதில் 81.65 சதவிகிதம் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக செலவிட உத்தரவிட்டார் என தெரிவித்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு, தமிழக வரலாற்றில் முதன்முறையாக சுயநிதிக் கல்லூரிகளில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் சேர்க்கை விகிதத்தை

அதிகரிக்கவும், அவர்கள் உயர் கல்வி பயில உதவும் வகையிலும், கட்டாயக் கல்விக் கட்டணங்களை 2011–2012 முதல் அரசே வழங்கும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு 26000 மாணவ மாணவியர்க்கு ரூ.111.45 கோடி உதவித் தொகையாக செலவிடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஆதிதிராவிடரின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக, ரூ.25000 என தனி நபருக்கு வழங்கப்பட்ட மானியம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்தில்தான் ரூ.2.25 லட்சமாக உயர்த்தப்பட்டு ரூ.79.86 கோடி மானியமாக கடந்த ஒரே ஆண்டில் 51479 நபர்களுக்கு தாட்கோ மூலம் வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டார்.

மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் வருடத்திற்கு 2 முறை நடத்தப்பட வேண்டும். சென்ற ஆட்சியில், ஐந்தாண்டுகளிலும் ஒரே ஒரு முறை தான் இக்கூட்டம் கூட்டப்பட்டது.

வன்கொடுமை தடுப்புச் சட்ட வழக்குகளை விரைந்து நடத்திட நான்கு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், மேலும் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க ஆணையிடப்பட்டு நடவடிக்கை உள்துறை மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

வன்கொடுமைகளை தடுத்து அமைதியான நிலையில் வாழ்வதற்கு சமூக விழிப்புணர்வு முகாம்கள், மக்கள் விழிப்புணர்வு பேரணிகள், சமபந்தி விருந்து போன்றவைகள் நடத்தப்படும் என அறிவித்தார்.

வன்கொடுமைகள் நடக்காத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (வன்கொடுமை கிராமங்கள்) தேர்வு செய்யப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் 150 கிராமங்கள் வன்கொடுமை கிராமங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வன்கொடுமை கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதி, மயானத்திற்குச் செல்லும் பாதை, மயான வசதிகள் மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் உள்ளனவா என்று உறுதி செய்யப்படுகின்றன.

பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு அக்கிராமத்திற்கு ரூ.2.00 இலட்சம் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஊக்கத் தொகையாக அனைத்து மாவட்டத்திற்கும் (சென்னை நீங்கலாக) வழங்கப்பட்டு வந்தது. அது மிகக் குறைவு எனக்கருதி தற்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அத்தொகையினை ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 31 மாவட்டங்களுக்கு (சென்னை நீங்கலாக) ரூ.310 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு நலத்திட்டங்கள், திறம்படச் செயல்படுத்துவதன்மூலம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழ்நாட்டில் வன்கொடுமைகள் குறைந்து மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகிறார்கள் என்று இக்குழுவால் உறுதி செய்யப்பட்டது.

திரு பொ. சிவசங்கரன், இ.ஆ.ப., ஆணையர், ஆதிதிராவிர் நலம் அவர்கள் இறுதியாக நன்றியுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் திரு பி. வேணுகோபால் மற்றும் M. ஆனந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 15 சட்டமன்ற உறுப்பினர்களுடன் செயலர், உள்துறை, காவல்துறை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர், இயக்குநர், பழங்குடியினர் நலம் மற்றும் தேசிய பட்டியலின ஆணையத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

**ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப.,**
**அரசு செயலாளர்,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**